செ.வெ.எண்:24 நாள்:11.04.2017

# 20.4.2017-க்குள் சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டும்

## நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் வேண்டுகோள்

சீமைக் கருவேல மரங்களால் நிலத்தடி நீர் குறைந்து வருவதாலும், நன்மை பயக்கும் இதர மரங்களை வளர விடாமல் தடுப்பதாலும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தி வருவதாலும் சீமைக் கருவேல மரங்களை வேருடன் அகற்ற மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையால் 10.2.2017 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் வளர்ந்துள்ள அனைத்து சீமைக் கருவேல மரங்களையும் / செடிகளையும் வேருடன் அகற்றிட ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், தனியார் மற்றும் குத்தகை இடங்களில் உள்ள பெரும்பாலான சீமைக் கருவேல மரங்கள், செடிகள் அகற்றப்பட வில்லை. இதனால் உயர்நீதி மன்றதத்தால் மரங்கள் / செடிகள் அகற்றப்படுவதில் நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்கள் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் பணிகள் சுணக்கமாக உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், 20.4.2017-க்குள் அனைத்து சீமைக் கருவேல மரங்களையும் அகற்றிடவேண்டும் எனவும் அதற்கான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, நீதிமன்ற ஆணையின்படியும், சுற்றுச்சூழல் நலன் கருதியும், நிலத்தடி நீர் குறைவதை தடுக்கும் நோக்கத்திற்காகவும், வேம்பு, புங்ன்கன் உள்ளிட்ட சுகாதாரமான சூழல் தரும் மரங்களை வளர்க்கும் பொருட்டும் 20.4.2017-க்குள் அனைத்து சீமைக் கருவேல மரங்கள் / செடிகளை தாங்களாகவே அகற்றிட வேண்டும். அவ்வாறு அகற்றாமல் இருந்தால் அரசு அலுவலர்களால் அகற்றப்பட்டு மரங்களை எடுத்துச் செல்வதோடு அகற்றியதற்கான செலவுத் தொகையை வசூல் செய்வதுடன், இருமடங்கு அபாராதமும் அளிக்க நேரிடும். எனவே, பொதுமக்கள் தங்களாகவே முன்வந்து ஒத்துழைப்பு நல்கி சீமைக் கருவேல மரங்கள்/ செடிகளை அகற்றி அபராதத்திலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**